உ

# ரவி மலர்




## சிவஸ்ரீ. பால. ரவீந்திரக் குருக்கள்

அவர்களின் நினைவாக

**16-12-2000**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோற்றம்
03.03.1972

மறைவு
07.12.2000

# சிவஸ்ரீ. பால. ரவீந்திரக் குருக்கள்

விக்கிரமக் கார்த்திகை விளங்கே காதசிவளர்
பக்கத்தி திசிவனார் பதந்தன்னைப் - பற்றினான்
பாலரவீந் திரக்குருக்கள் இளமையோடு சிவநீழல்
கோலப்பெரு முத்தி பெற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரவிக்குருக்களின் வாழ்க்கைச் செயல்

பாரனிலே சீர்கொண்டு சிறப்பு மிகும் இலங்கை மாநகரில் காண்போர் கண்கொள்ளை கொள்ளும் பேர் நகரமாம் யாழ் நகரில் கார் முகில் சூழும் ஊராம் அரியாலைப் பதியினிலே அமரர் தேர் ஏறிய ஆசிரியர் பாலசுப்பிரமணியக் குருக்களுக்கும் திருமதி. நாகேஸ்வரிக்கும் ஒன்பதாவது குழந்தையாய் 03-03-1972 அன்று மண்ணில் உதயமானார். ரவீந்திரசர்மா எனும் இளமைத் திருநாமத்தைச் சூட்டினார்கள். உலகமே உன் சிரிப்பில் தான் ஐயா விடிகிறது என்று தெரிந்துதானோ ரவி என்று செல்லப் பெயர் வைத்தார்கள்.

இளைமையும் வலிமையும் பெற்று ஆரம்பக்கல்வியை யாழ் நாயன் மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையிலும் தொடர்ந்து ஸ்ரான்லிக் கல்லூரியிலும் கல்வி கற்றார். ரவிக்கு படிப்பும் துடிப்பும் பிறப்பிலேயே பிறந்து விட்டது. படிப்பு என்ன படிப்பு? அதற்கும் மேலாம் இறைவனல்லோ மேல் என்று இன்னும் ஒரு படி மேலே தன்னுடைய வாழ்க்கையை இறைதொன்டுக்கே அர்பணித்தார். உபநயனத்தை தென் இந்தியா நாக பட்டினத்தைச் சேர்ந்த சீதாராம சாஸ்திரிகளிடத்திலும் சிவாச்சார்யாபிஷேகத்தை இனுவையூர் தா. மகாதேவக் குருக்களிடமும் பெற்றார். ஆரம்ப வேதாகம நெறி முறைகளை தந்தையாரிடத்திலும் தொடர்ந்து பெரியதந்தையார் நாயன்மார்க்கட்டு சாம்பசிவ சிவாச்சாரியாரினதும் தாத்தா இனுவையூர் இராமநாதக் குருக்களினதும் ஆசீர்வாதத்துடனும் தந்தையின் அனுசரணையுடனும் பேராசிரியர் கா.கைலாசநாதக் குருக்களிடமும் இனுவை தா.மகாதேவக் குருக்களிடமும் மேன்மையுறபயின்றார்.

நீண்ட காலமாக அரியாலை கொட்டடி ஸ்ரீ ஞான வைரவர் கோவில், திருமகள் முத்து வைரவர் கோவில், கொட்டுக்கிணற்று அம்மன் கோவில் ஆகிய ஆலயங்களுக்கு பிரதமகுருவாக சிறப்புடன் கடமையாற்றினார். கொய்யாத்தோட்டம் பிள்ளையார் கோவில், பாண்டியன் தாழ்வு நரசிம்ம வைரவர் கோவில்களிலும் சிறப்புக் கிரியைகளை செவ்வனே நடாத்தி வைத்தார். ரவியின் ஆச்சார்யா இலட்சனத்துக்கு என்ன குறை? விபூதிக்குறியும் குங்குமப்பொட்டும் கொண்ட நெற்றி அழகும், கலர் வேட்டியும் சால்வையும் அழகுடல் நல்லஉத்தரீயமும் கொண்டு நடந்தால் என்ன நடையழகு? உருத்ரட்சமும் மணிமாலையும் கொண்ட மார்பழகும் முகத்திற்கே உறிய சிரிப்பழகும் ரவிக்குருக்களுக்கு என்ன குறை? ரவியின் பொறுமையும் பெருமையும் கொட்டடி வைரவரைக் கேட்டாலே தெரியும். அரியாலை மக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பும் ஆதரவும் நிரம்பபெற்ற ரவி கொழும்பு நகர் கொள்ளுபிட்டி ஒன்பதாம் மாடி ஸ்ரீ தேவி கருமாரி அம்மன் அருள் வேண்டி ஒரு வருடத்திற்கு மேல் பிரதம சிவாச்சாரியராக விளங்கினார்.

நீர்கொழும்பில் வசிக்கும் மூத்த சகோதரி குகேஸ்வரர் குருக்கள் மனோரஞ்சிதம் குடும்ப உறவால் சித்திவிநாயகர் கடைக்கண் இவர்பால் பட்டது. இவர்களிடம் அதிகம் தங்கிநின்று இவர்களின் பிள்ளைபோல் தங்கி வளர்ந்தார். சித்தி விநாயகரே பிறவிக்கடலை தீர்க்க வல்லவர் என்று தெரிந்து தானே இங்கேயே வசிக்க முடிவு செய்து விட்டார். தலாத்துவ ஸ்ரீ தேவி கருமாரி அம்மன் கோவிலுக்கும் சிவஸ்ரீ குகதாசக்குருக்களின் உதவிகுருவாக பல கிரியைகளை நடாத்தி வைத்தார். தெய்வங்களுக்கு கொடுத்த திரு நாமங்களைவிட அடியார்கள் ரவிஐயா ரவிஐயா என்று சொல்லிக்கூப்பிடும். பெயர்தான் அதிகம் உலகத்தை எழுப்ப சூரியன் எழவேண்டும் அந்தச் சூரியனையே ரவிதான் எழுப்புவார். "நிலாவின் ஒளிவீசும் நின்னுடைய நீண்டவானமையா" என்று ரவிஐயா படிக்கும் பாட்டைக் கேட்டுத்தான் சந்திரன் வரவேண்டும். மழையா? பணியா? எல்லாம் ஒன்றுதான். தலையனி வேண்டாம் போர்வை வேண்டாம் எனும் ரவிக்கு உடலே போர்வை தலையே தலையனி. சித்தி விநாயகருக்கு அலங்கார நைவேத்தியம் கொணர்ந்து வசந்த மண்டபத்தில் அலங்காரப் பூசை செய்தாலே போதும். ஆனந்தத் தெய்வீகம் ரவிஐயா முகத்தில் ஊசலாடும். இடையில் அண்ணன் சாம் ஜெகதீஸ்வரக் குருக்களின் உதவியுடன் சிங்கப்பூர் வூட்லன்ஸ் அரசசேகரி சிவன் கோவிலுக்கு உதவிக்குருவாய் செல்லும் வாய்ப்புப்பெற்று சென்றார். சிங்கப்பூர் ரவிஐயாவின் முகவரியை ஒவ்வொரு வீட்டு முகத்திலும் பார்க்கலாம் பிரதம குருவாகவும் அங்கு சிலநாட்கள் கடமையாற்றியிருந்தார். சிங்கப்பூரில் தங்கியிருந்தவேளை உனது அம்மாவை அழைத்து சிங்கப்பூர் முழுவதும் சுற்றிக் காட்டி மகிழ்ச்சியோடு நீ எடுத்த வீடியோபடம் உனது தாயன்பின் உச்சியை எடுத்துக் காட்டுகிறது. அந்தத் தாயைவிட்டு ஏனடா கடலுக்குச் சென்றாய்?

நவராத்திரி வாழைவெட்டில் வாள்வீரனாய், திருவிழா இலட்சார்ச்சனைகளில் சொற்பொழிவுச் செல்வனாய், ஸ்தோத்திரம் கீர்த்தனைகள் படிப்பதில் சங்கீதஞானியாய், வஞ்சகமில்லா நெஞ்சனாய் கிரியாமந்திரத்தின் மகத்துவமாய், வேதாகம இளங்கருவாய், மேலும் மேன்மையுற வருவாய் வருவாய் என்று பலர் சிந்திக்கும்படி நற்குருவாய் உருவாய் உளங்கொண்டவர் ரவிஐயா. நயிண சிவ ஸ்ரீ பரமேஸ்வரக்குருக்கள், தெல்லிப்பளை விஸ்வநாராயண சர்மா, இந்தியளா பிள்ளையார்பட்டி பிச்சைக் குருக்கள் போன்ற பெரியோர்களின் கிரியா அனுபவங்களை பெற்று பல ஆலயங்களில் சென்று இரியாநெறிகளை முறையாக நடாத்திவைத்தார். நீர்கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியார்களின் அன்புக்கு பாத்திரமான ரவிஜயா அவர்களுக்கு கொடுக்கும் அருச்சனைப்பூவுடன் சிரிப்பும் கொடுப்பது வழக்கம். பொறுமைக்கு பூமாதேவி என்று சொல்வதைவிட பொறுமைக்கு ரவி என்று சொல்லாமோ என்று தோன்றும் அளவுக்கு பொறுமையில் பெருமைகண்டவர், சகோதரர்கள் சர்வேஸ்வரக்குருக்கள், குகேஸ்வரக்குருக்கள், பாலசுந்தரக் குருக்கள் இந்திரசர்மா சகோதரிகள் ரஞ்சினி, கௌரி, ராணி, லதா, சத்தியா, கலைவானி ஆகியோரிடம் வற்றாத அன்பு, பற்றான பாசம், முற்றாத நேசம் எல்லாவற்றையும் எந்த அளவு கோல் கொண்டு அளப்பது? ஸ்ரீவித்யா அண்ணி, மாதங்கி அண்ணி, கண்ணன் அண்ணி ஆகியவர்களிடம் வைத்திருகும் அன்புக்கடன் எப்படித்தான் தீருமோ?

அன்மையில் சிங்கப்பூரில் இருந்து தங்கையின் திருமணக் கோலத்துக்காக இந்தியா வந்து சிறப்பாகவே நடாத்தி வைத்தாய். மீண்டும் நீர்கொழும்பு நீர் காணவேண்டும் என்பதற்கோ இங்கு ரவிஜயா வந்தாய். உன்னுடைய அத்தான்மார்களிடம் நீ வைத்த அன்பு ஒப்பற்றதாகும். தாய்மாமன்மார், அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார், எல்லோரிடமும் அன்பாகவே பழகிவந்தாய். மருமக்கள் யாவரும் ரவிமாமா, ரவிமாமா என்றும் பெறாமக்கள் ரவிச்சித்தப்பா, ரவிச்சித்தப்பா எனவும் அழைப்பதற்கு இந்த உலகத்தில் யாரைத் தேடுவது?

யாரிடமும் கடன் வைக்ககக் கூடாது என்ற மனப்பான்மையால்தான் எல்லோருக்கும் ஏதோ ஒன்றையாவது கொடுப்பது வழக்கம். ஆனால் நம்மையெல்லாம் பிறர் கடனை செய்யவைத்து விட்டரே! மணமகனாய் பார்ப்போம் பார்ப்போம் என்று எல்லோரும் இருக்க பிணமகனாய் பார்க்க வேண்டிய விதியை பிரம்மனுக்கு படைக்க எப்படி மனம் வந்தது? ரஞ்சனி அக்கா நான் தண்ணீரில் குளித்து விட்டு வருகிறேன் என்று சொல்லி விட்டு நம் கண்ணீர் குளத்தை திறந்து விட்டரே! பிறவிக்கடனை நிந்துவரே இறைவனடி சேருவர் என்றறிந்த ரவி நீர்கொழும்பு, கடலிலேயே நீந்தி 07-12-2000 வியாழக்கிழமை ரவி மறையும் நேரம் ரவியாய் மறைந்து விட்டாய். வலது கைகாட்டி அபயம் கொடுத்து நிற்கும் வழக்கம் உனது படங்களில் கண்டோம்.

எதற்கு கைகாட்டி படம் எடுத்தாய் என்றால் எல்லோருக்கும் ஆசீர்வாதமா அல்லது பயணம் சொன்னாயா? உனது ஆத்மா இறைவனடியில் அமரட்டும் உனது அன்புச் செயல் எமது மனதில் அமரட்டும்.

**சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

(மஹாவித்வான்) ஆக்கம்

**பிரம்மஸ்ரீ மா.த.ந வீரமணிஐயர் M. A. இணுவில்**

## புனிதநல் லாத்மாவும் பெறுக சாந்தி

வேதமும் ஆகமும் வியாக ரணம்
விளங்குமுப நிடதநூற் பேர றிஞன்
வேதியராம் பாலசுப்பிரமணிய குரு
வனிதைநா கேஸ்வரியும் தவத்தா லீன்று
ஆதவன் போல் தேசுரவீந் திரக்கு ருக்கள்
அழகனும் ஆழிதனில் ஆவி ஈய்ந்தே
பூதலத்தை நீத்துச்சிவ பதத்தில் சேர்ந்தான்
புனித நல் லாத்மாவும் பெறுக சாந்தி

கட்டழகன் ரவீந்திரக் குருக்கள் கல்வி
கலைகளிலே தேர்ச்சிபெற்றான் வடமொழியில்
சுட்டித்தனம்மிக்க கல்வி யாளன்
சுகுணகுணன் ஆலயத்தில் கிரியா பாகம்
கெட்டித் தனமுடனே பக்தி யோடு
கோவில் பூஜாவி தானம் புரிந்திடுவான்
விட்டுப் பிரிந்தானே ரவீந்திரனும்
விண்ணுலகில் அவனாத்மா பெறுக சாந்தி.

அன்பினொடு பழகிடும்நற் பண்பு முள்ளான்
அழகொழுக காரியங்கள் நிறைவாய்ச் செய்வான்
இன்பமொடு இனித்திருநற் கீதம் பாடி
இறைபக்தி செய்திடுவான் ரவீந்திரனும்
பண்புமுகம் காண்போமோ அவனி தன்னில்
ஆனந்தப் புன்சிரிப்பைக் காண்ப தெப்போ
இன்மொழியும் இன்குரலை இனி கேட்போமோ?
இறைபதத்தில் அவனாத்மா பெறுக சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுதாபச் செய்தி

**காயத்திரீபீடம் தர்மசாஸ்தா குருகுலம்**
**அதிபர்: சிவகாம ஞான பாஸ்கரன்**
**சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள்**

**ஸ்ரீ கண்ணகாபரமேஸ்வரி தேவாலயம்**
**இணுவில்**

எப்போதும் அமைதியாகவும் சமூகத்தில் எப்போதும் புன்சிரிப்போடும் கூடிய சிவஸ்ரீ. பாலரவீந்திரக் குருக்கள் இளம்வயதில் இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம். யாழ்ப்பாணத்தில் விப்ரர்கள் அநேகர் எங்கள் குருகுலத்திற்கு வந்து அவர் தம் மறைவு பற்றி விசாரித்துச் சென்றார்கள். அரியாலை ஞானபைரவர் தேவஸ்தான அறங்காவலர் சபையினரும் அங்கு ரவிஐயாவோடு உறவினர் போல் பழகிய கிராமமக்களும் ஆலய பக்தர்களும் அவர்தம் மறைவுச் செய்தியைக் கேட்டு தாம் அதிர்ச்சியடைந்ததை சோகத்தோடு வெளிப்படுத்தினார்கள். எல்லோரிடமும் அன்போடும் பண்போடும் பழகும் இனிய சுபாவம் கொண்ட சிவஸ்ரீ பால ரவீந்திரக்குருக்களுக்கு சிவாச்சார்யாபிஷேகம் செய்து வைத்த எனக்கு தனது குருத்துவம் மூலம் பெருமையைத் தேடித்தந்தவர் அவர். "பூலோகத்தில் தம்மை ஆராதித்து போதும் சுவர் லோகத்திற்கு வா" என்று இறைவர் அவரைத் தம்மிடம் அழைத்துக் கொண்டார் போலும். அவரது பிரிவால் துயருறும் அவர் தம் தயார் உறவினர்கள் எல்லோருக்கும் துன்பம் மறந்து தேறுதல் அடைய இறைவன் அனுக்கிரகிப்பனாக.

இங்கனம்
**சிவஸ்ரீ. தா. மகாதேவக்குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அன்பு மலை சரிந்தது

எமது கருமாரி அம்மன் ஆலயத்திற்கு வந்து அன்போடும் அருளோடும் பூஜைகள் செய்த ரவிக்குருக்கள் எம்மைவிட்டுப் பிரிந்த செய்தி பெரும் அதிர்ச்சியைத் தந்தது.

சிறிய கோவிலோ, பெரிய கோவிலோ சிறியவரோ, பெரியவரோ வேறுபாடின்றி பண்போடு பழகி, அன்போடு பேசும் ஐயாவைப் போல் காண்பது அரிது. சிங்கப்பூரால் வந்தும் எமது ஆலயப் பணிகளைச் செய்து கொண்டிருந்தார். என்ன காரணமோ கடவுள் தன்னிடம் சேர்த்துவிட்டார். அன்பு மலை சரிந்தது. அவருடைய ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதைத் தவிர வேறு வழியில்லை. ஐயாவின் சிரித்த முகத்தை எங்கே காண்போம்.

**சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**ஆலய பிரதம குரு. இ. குகதாஸக் குருக்கள்**
**தலைவர்: S. சக்திவேல்**
**செயலாளர்: S. R. நடராஜா**
**தாலாதுவ ஊர்மக்கள்**

உ

# கண்ணீர் அஞ்சலி

எமது ஆலயத்தின் ஒளி மறைந்து விட்டது. ஞான பைரவர் கோவில் தேவஸ்தானத்தில் நாலு பரம்பரை வழியாக வந்த நாலாவது சிவாச்சாரியாராக விளங்கிய ரவிக் குருக்கள் அவர்களின் பிரிவுச் செய்தி எம்மை அதிர்ச்சியில் ஆழ்த்தி விட்டது. எமது ஆலயத்தில் ஆரம்பப் பணிகளை தொடங்கி பல இடங்களிலும் பணியாற்றியவர். அவா தீபாராதனை செய்யும அழகு தனித்துவமானது. அவர் ஆலயத்தில் நிற்கும் போது பேரொளி பரவும் அப்போரொளி ஜோதியில் கலந்து விட்டது. அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

**ஓம் சாந்தி சாந்தி.**

**சைவ இளைஞர் சங்கமும்**

**ஆலய பரிபாலசபையும்**
**ஸ்ரீ ஞான பைரவர் கோவில் - அரியாலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியாலை. அமரர் சிவஸ்ரீ. கு. பாலசுப்பிமணியக்குருக்கள்

# ரவீந்திரக்குருக்கள் (ரவிஐயா)

அவர்களின் மறைவுகுறித்த

## அனுதாபச்செய்திகள்

அரியாலை - சிவாகமசாகரம். அமரர் சிவஸ்ரீ. கு. பாலசுப்பிரமணியக்குருக்கள் அவர்களின் புதல்வர். ரவீந்திரக்குருக்கள் அகாலமரணமடைந்தசெய்தி கேட்டு அதிர்ச்சியும் சொல்லணாத்துயரமும் அடைந்தேன். இச்செய்திபொய்யாக இருக்க கூடாதா! என ஏங்கினேன். ஆனால் உண்மைதான் என்பதை அறிந்தேன். வாழும் வயதினிலே கடல்கொண்டுபோனது கொடுமையிலும் கொடுமை. அன்னாரின் பேரிழப்பால் துயருறும் குடும்பத்தார்க்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**(நயினை) சிவஸ்ரீ. சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்கள்.**
கிர்லப்பனை. கொழும்பு

அரியாலை சிவாச்சார்யதிலகம் அமரர் கு. பாலசுப்பிரமணியக்குருக்கள் அவர்களின் புதல்வர் ரவி என செல்லமாக அழைக்கும் ரவீந்திரக்குருக்களின் மறைவு அன்னாரின் குடும்பத்தார்க்கு பெரும் இழப்பாகும். விதிவந்து கடல் கொண்டுபோனபெரும் துயரால் துன்பக்கடலில் தவிக்கும் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறேன். அன்னாரின் ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கின்றேன்.

**ஜோதிடமணி சிவஸ்ரீ கே. பி. ராமநாதக்குருக்கள்**
நாரம்பிட்டிய

அன்புக்கும் மதிப்புக்குமுரிய அரியாலை சிவாகமசாகரம் சிவஸ்ரீ கு. பாலசுப்பிரமணியக்குருக்கள் (ஆசிரியர்) அவர்களின் புதல்வர் ரவீந்திரக் குருக்களின் திடீர் மறைவு ஆழ்நத கவலையைத் தந்துள்ளது. வேத ஆகம கல்வியும் நற்பண்புகளும் பெற்று யாவராலும் போற்றப்பட்டுவந்த ரவி ஐயாவின் அகாலமரணம் ஈடுசெய்ய முடியாததொன்றாகும். அன்னாரின் ஆத்மா சாந்தி பெற வேண்டுவதோடு அவர்தம் குடும்பத்தவர்க்கும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**சிவஸ்ரீ. கி. சோமசுந்தரக்குருக்கள்**
மட்டுவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடாவிலிருந்து குகன் அத்தான் சத்திய அக்காவின்

# கண்ணீர் அஞ்சலி

அமரர் பாலசுப்பிமணியக் குருக்கள் ரவீந்திரக் குருக்கள் 07.12.2000ம் ஆண்டு மரணம் அடைந்த செய்தியினால் வந்து கொள்ளமுடியாத தூர தேசத்திலிருந்து அல்லலுறும் உடன் பிறப்பின் கண்ணீர் அஞ்சலி அல்லலுறும் உடன் பிற்ப்பின் கண்ணீர் அஞ்சலி.

பாசமிகு உடன் பிறப்பே!
பண்புள்ள தம்பியரே!
பாதியில் போவதற்காகவா;
பதியினிலே வந்துதித்தாய்!
அன்பினிலே சிறந்திருந்தாய்
அழகினிலே மிளிர்ந்திருந்தாய்
அமைதியான உன் முகத்தை
அழித்ததுவோ ஆழியலைகள்

பாயுதடா கண்ணீர் இங்கு அருவியாறாய்
கலங்குதடா மனசு உந்தன் செய்தி கேட்டு
மாலை சூடும் செய்திவரும் என்றிருந்தேன் உன்
மரணச்செய்தி கேட்டு மதி குழம்பிவிட்டேன் இங்கு!

ஆண்டு ஐந்து போனதுவே தெரியவில்லை
அக மனதில் உன் அழகுமுகம் அழியவில்லை
அமைதி ஒன்று வந்துவிடும், சொந்த நாடு வாந்து
அளவளாவி மகிழ்ந்திடவே கனவு கண்டேன்.

கண்டதுவும் பகல் கனவாய்
கண்ணீரில் கரைந்து போன மணல்வீடாய்
என்று இனி உன் முகத்தை கண்டு நானும்
கதைகள் பல பேசி மனம் மகிழ்வேனே சொல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரத்திலிருந்து நேரடியாகக் கலந்து கொள்ள முடியாத

மைத்துனன்

## பா. ஜோதிநாதனின் துயர அலை

ஆறாத அன்பும் மாறாத நட்பும் தாழாத பண்பும் எம்முடன் வாழாமல் போனதுவோ! மீளாத துயில் ஏனடா எம் மணநாளில் ஆடியும் பாடியும் தாடியும் கொண்டு மணவாழ்க்கை கூடிக்கொடுத்து எங்கே நீ சென்றாய் அழகான ஆடையும் வாடாத மலர் வாடையும் நாளான மணக் கோலமாய் வருமென காத்திருந்தோம். முற்றாத முகப் பார்வையும் முத்தான புன சிரிப்பும் வற்றாத மைத்துனா ரவி நித்திரை கொள்கிறாயோ. சுற்றமுடன் சூழ்ந்து எமை இந்தியா சுற்றிக்காட்டி குற்றமிலா குணங்கொண்டு உற்றதுணையாய் முற்றவெளியில் சுவிசுக்குக் கைகாட்டி அனுப்பிவிட்டு உற்ற இடத்திற்கு உறுதுணையாய்ச் சென்றாயோ.

என்றென்றும் நீங்கா நினைவுடன்

மைத்துனன்
ஜோதினாதன்

அன்புத் தெய்வமே உன் ஆறாத்துயரில்
என்றும் நனைகிறோம்

தாய்
சகோதர சகோதரிகள்
அத்தான்மார், அண்ணிமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபை

## பூதவுடல் மறைந்தாலும் புகழுடம்பு என்றும் மறையாது

தோன்றில் புகழொடு தோன்றுக. அஃதிலர் தோன்றில் தோன்றாமை நன்று என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க புகழோடு தோன்றி புகழோடு வாழ்ந்து புகழோடு இறைவனடி சேர்ந்த பெருமை அமரர் சிவஸ்ரீ ரவீந்திரக் குருக்கள் அவர்களையே சாரும்.

யாழ் அரியாலையில் பிரபல்யமான குடும்பத்தில் பிறந்தாலும் தெய்வீக மனங்கமழும் நீர்கொழும்பு நகரிலே எமது ஆலய பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ குகேஸ்வரக் குருக்கள் அவர்களுக்கு மைத்துனராகி அவருக்கு பக்பலமாக இருந்து ஆலயக்கிரிகைகளை உரிய முறையில் திறம்பட நடாத்தி நீர்கொழும்பு வாழ் இந்து மக்களின் மனதில் இடம் பிடித்துக்கொண்ட ரவி ஐயாவின் அகால மறைவு ஈடுசெய்ய முடியாத தொன்றாகும்.

இங்கு செய்த சமயச் சேவையை பல வெளிநாடுகளில் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தினால் பல வருடங்கள் வெளிநாட்டிலும் சேவை செய்து பெருமை தேடிக்கொண்டவர். இருந்தும் எமது நாட்டிற்கே சேவையாற்ற வேண்டும் என்ற ஆர்வத்தினால் மீண்டும் வந்து சேவையை ஆரம்பித்தார்.

எமது ஆலயத்தில் நடைபெறும் விசேட தினங்களில் எமது பிரதம சிவாச்சாரியார் இல்லாத வேளையில் அவற்றை சிறந்த முறையில் நடாத்தி எமது பெரு மதிப்பைப் பெற்றவர் அவரின் புன் முருவல் பூத்த முகமும், அன்பான வார்த்தையும், அமைதியான நற்பண்பும் அவருக்கு மேலும் பெருமை சேர்த்தன. அவர் ஆலயத்துக்கு வருகை தருகின்ற வேளையில் வயது வித்தியாசமின்றி அடியார்கள் கூட்டம் சூழ்ந்து கொள்வதிலேயே அவரது அன்புக்கு சான்றாகும்.

இவ் இளவயதிலேயே இவ்வளவு பெருமை தேடிக் கொண்டது காலனுக்கு பிடிக்கவில்லை போலும், எனவேதான் குடும்பத்தினர் அருகில் இல்லாதவேளை தனது கைங்கரியத்தை காட்டிவிட்டான்.

அன்னாரின் தீடீர் மறைவு எமக்கு மட்டுமல்லாமல் நீர்கொழும்பு வாழ் மக்களுக்கு ஓர் பேரிழப்பாகும். அன்னாரின் குடும்பத்தினர் அனைவருக்கும எமது சபை சார்பாகவும் எனது சார்பாகவும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல ஸ்ரீ சித்தி விநாயகனின் பாதார விந்தங்களை வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி!

**ஜெயம் விஜயரத்தினம்**
தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிகம் 1

இப்பதிகத்தை 48 நாட்கள் ஓதினால் நரம்புத் தளர்ச்சி, வாதம், வலிப்பு முதலிய நோய்கள் குணமாகும்.

காழிப் பிள்ளையார் பல தலங்களையும் தரிசனம் செய்து கொண்டு மழநாட்டைச்சார்ந்த திருப்பாச்சிலாச்சிரமம் எனும் இத்தலத்திற்கு எழுந்தருளினார். 'கொல்லிமலவன்' எனும் அன்னாட்டு மன்னனுடைய மகளுக்கு "முயலகன்" எனும் தீராத நோயிருந்தது. சம்பந்தப்பெருமான் வருவதை அறிந்த அரசன் அன்புடன் அவரை வரவேற்றுத் தன் மகளின் நோயை நீக்கியருள வேண்டினான். அருள் உள்ளம் கொண்ட சம்பந்தப் பெருமான் "துணிவளர் திங்கள்" எனும் இப்பதிகத்தைப் பாடி இறைவனை வணங்க நோய் கதுமென மறைந்து ஒழிந்தது.

இன்றும் பலர் முழு நம்பிக்கையுடன் இப்பதிகத்தை ஓதி மேலே கண்ட நோயிலிருந்து விடுபடுவது உண்மையே ஆகும்.

திருச்சிற்றம்பலம்

திருப்பாச்சிலாச்சிரமம் பண்: தக்கராகம்

துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச்
சுடர்ச்சடை சுற்றிமுடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடஞ்சூழ
வாரிடமும் பலி தேர்வர்
அணிவளர் கோலமெலாஞ் செய்து பாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை வாட
மயல் செய்வதோ இவர் மாண்பே.

கலைபுனை மானுரி தோலுடையாடை
கனல் சுடரால் இவர் கண்கள்
தலையணி சென்னியர் தாரணிமார்பர்
தம் அடிகள் இவரென்ன
அலைபுனல் பூம்பொழில் சூழ்த்தமர் பாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
இலைபுனை வேலரோ ஏழையை வாட
இடர் செய்வதோ இவரீடே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெஞ்சுடராடுவர் துஞ்சிருள் மாலை
வேண்டுவர் பூண்பது வெண்ணூல்
நஞ்சடை கண்டர் நெஞ்சிடமாக
நண்ணுவர் நம்மை நயந்து
மஞ்சடை மாளிகை சூழ்தரு பாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
செஞ்சுடர் வண்ணரோ பைந்தொடி வாடச்
சிதை செய்வதோ இவர் சீரே

கனமலர்க் கொன்றை அலங்கல் இலங்கக்
கனல்தரு தூமதிக் கண்ணி
புனமலர் மாலை அணிந்தழகாய
புனிதர் கொலாம் இவர் என்ன
வனமலி வண்பொழில் சூழ்தருபாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
மனமலி மைந்தரோ மங்கையைவாட
மயல் செய்வதோ இவர்மாண்பே.

மாந்தர் தம்பால் நறுநெய் மகிழ்ந்தாடி
வளர்சடை மேற்புனல் வைத்து
மோந்தை முழாக்குழல் தாளமோர் வீணை
முதிரவோர் வாய்மூரி பாடி
ஆந்தை விழிச்சிறு பூதத்தர் பாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
சாந்தணி மார்பரோ, தையலை வாடச்சதுர்
செய்வதோ இவர் சார்வே

நீறுமெய்ப்பூசி நிறைசடை தாழ
நெற்றிக் கண்ணாலுற்று நோக்கி
ஆறதுசூடி ஆடரவாட்டி
ஐவிரற் கோவன ஆடை
பாறரு மேனியர் பூதத்தர் பாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
ஏறதுஏறியர் ஏழையை வாட
இடர் செய்வதோ இவரீடே

பொங்கிள நாகம் ஓர் ஏகவடத்தோடு ஆமை
வெண்ணூல் புனைகொன்ற
கொங்கிளமாலை புனைந்தழகாய்
குழகர் கொலாம் இவரென்ன
அங்கிள மங்கையோர் பங்கினர் பாச்சி
லாச்சிராமத்துறைகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கொளி வண்ணரோ தாழ்குழல் வாடச்
சதிர்செய்வதோ இவர் சார்வே

ஏவலத்தால் விசயற்கருள் செய்து
இராவணனை யீடழித்து
மூவரிலும் முதலாய் நடுவாய்
மூர்த்தியை யன்றி மொழியாள்
யாவர்களும் பரவும் மெழிற் பாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
தேவாகள் தேவரோ சேயிழை வாடச்
சிதை செய்வதோ இவர் சேர்வே

மேலது நான்முகன் எய்தியதில்லை
கீழது சேவடி தன்னை
நீலது வண்ணனும் எய்தியதில்லை
யென இவர் நினறதுமல்லால்
ஆலதுமாமதி தோய் பொழிற் பாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
பாலது வண்ணரோ பைந்தொடி வாடப்
பழிசெய்வதோ இவர் பண்பே

நாணெடு கூடிய சாயினரேனும்
நகுவரவர் இருபோதும்
ஊணொடு கூடியவுட்கு நகையாலுரை
களவை கொள வேண்டா
ஆணொடு பெண் வடிவாயினர் பாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
பூண் நெடு மார்பரோ பூங்கொடிவாடப்
புனை செய்வதோ இவர்பொற்பே

அகமலி அன்பொடு தொண்டர் வணங்க
ஆச்சிராமத் துறைகின்ற
புகைமலி மாலை புனைந்தழகாய
புனிதர் கொலாம் இவரென்ன
நகைமலி தண்பொழில் சூழ்தரு
காழிநற்றமிழ் ஞானசம்பந்தன்
தகைமலி தண்டமிழ் கொண்டிவையேத்த
சாரகிலா வினை தானே.

(பதிகம் முற்றிற்று)

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிகம் 2

திருநள்ளாறு பண்: பழந்தக்கராகம்

**சனிக்கிரக்கத்தால் வரும் எல்லாவித தோஷமும் போக்கி நலம் தரும் பதிகம்:-**

சனிபகவானால் வரும் தோஷங்கள் நீங்க யாவரும் திருநள்ளாறு செல்வது தெரிந்தே சம்பந்தப்பெருமான் பாடியருளிய இப்பதிகம் அனல் வாதத்தின்போது வேகாமல் நின்ற 'பச்சைப் பதிகமாகும்'. இப்பதிகத்தை பாராயணம் செய்பவர்களும் வினையினால் (சனிக்கிரகத்தினால்) பாதிக்கப் படமாட்டார்கள் என்பது சொல்லாமல் விளங்கும்.

திருச்சிற்றம்பலம்

போகமார்த்த பூண்முலையள் தன்னோடு பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண்வெள் ளேற்றண்ணல் பரமேட்டி
ஆகமார்த்த தோலுடையன் கோவண ஆடையின் மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே 1

தோடுடை காதுடையன் தோலுடையன் தொலையாப்
பீடுடைய போர்விடையன் பெண்ணுமோர் பாலுடையன்
ஏடுடைய மேலுலகோடு ஏழ்கடலுஞ் சூழ்ந்த
நாடுடைய நம்பெருமான் மேயது நள்ளாறே 2

ஆன்முறையா லாற்ற வெண்ணீறாடி அணியிழையோர்
பான் முறையால் வைத்தபாதம் பத்தர் பணிந்தேத்த
மான்மறியும் வெண்முழுவும் சூலமும் பற்றிய கை
நான் மறையான் நம்பெருமான் மேயது நள்ளாறே 3

புல்கவல்ல வார்சடை மேற்பூம்புனல் பெய்தயலே!
மல்கவல்ல கொன்றை மாலை மதியோடுடன் சூடிப்
பல்கவல்ல தொண்டர் தம் பொற்பாத நிழற்சேர
நல்கவல்ல நம்பெருமான் மேயது நள்ளாறே 4

ஏறுதாங்கி யூர்திபேணியோர்கொள் இளமதியம்
ஆறுதாங்குஞ் சென்னிமேலோர் ஆடரவஞ்சூடி
நீறுதாங்கி நூல்கிடந்த மார்பில் நிரை கொன்றை
நாறு தாங்கும் நம்பெருமான் மேயது நள்ளாறே 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திங்களுச்சி மேல்விளங்கும் தேவன் இமையோர்கள்
எங்களுச்சி யெம்மிறைவன் என்றடியே யிறைஞ்சத்
தங்களுச்சி யால்வணங்குந் தன்னடியா கட்கெல்லாம்
நங்களுச்சி நம்பெருமான் மேயது நள்ளாறே 6

வெஞ்சுடர்த்தீ அங்கையேந்தி விண் கொண்முழவதிர
அஞ்சிடத்தோர் ஆடல் பாடல் பேணுவதன்றியும் போய்ச்
செஞ்சடைக்கோர் திங்கள் சூடித்திகழ்தரு கண்டத்துள்ளே
நஞ்சடைத்த நம்பெருமான் மேயது நள்ளாறே 7

சிட்டமார்ந்த மும்மதிலுஞ் சிலவரைத் தீயம்பினால்
சுட்டுமாட்டிச் சுண்ணவெண்ணீறாடுவதன்றியும் போய்ப்
பட்ட மார்ந்த சென்னிமேலோர் பால்மதியஞ்சூடி
நட்டமாடும் நம்பெருமான் மேயது நள்ளாறே 8

உண்ணலாகா நஞ்சு கண்டத்துண்டுடனே யொடுக்கி
அண்ணலாகா வண்ணல் நீழல் ஆரழல் போலுருவம்
எண்ணலாகாவுள் வினை என்று எள்க வலித்து இருவர்
நண்ணலாகா நம்பெருமான் மேயது நள்ளாறே 9

மாசு மெய்யர் மண்டைத்தேரர் குண்டர் குணம் இலிகள்
பேசும் பேச்சை மெய்யென்றெண்ணி யந்நெறிசெல்லன் மின்
பூசுவண்டார் கொன்றைசூடி மும்மதிலும் உடனே
நாசஞ்செய்த நம்பெருமான் மேயது நள்ளாறே 10

தண்புனலும் வெண்பிறையுந் தாங்கிய தாழ்சடையன்
நண்பு நல்லார் மல்கு காழி ஞானசம்பந்தன் நல்ல
பண்பு நள்ளாறேத்து பாடல் பத்தும் இவைவல்லார்
உண்பு நீங்கி வானவரோடு உலகிலுறைவாரே 11

(பதிகம் முற்றிற்று)

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிகம் 3

## குளிர் காய்ச்சல், வியைால் வரும் துன்பங்கள் நீங்க பாராயணம் செய்ய வேண்டிய பதிகம்

கொடிமாடச் செங்குன்றூரில் சம்பந்தப் பெருமான் அடியார்களுடன் தங்கி இருக்கும் சமயத்தில், அடியார்கள் குளிர் காய்ச்சலால்வருத்தம் அடைந்தனர். வினையால்வரும் இக்குளிர் காய்ச்சல் நோயிலிருந்து அடியார்களை விடுவிக்க பாடியருளிய பதிகம் இப்பதிகம். நோய்கள் எல்லாம் நாம் செய்யும் தீவினையால் வருபவையேயாகும். இப்பதிகத்தை அன்புடன் ஓதிவந்தால் தீ வினையால் வரும் நோய்கள் நம்மை வாதிக்காது என்பது அனுபவத்தால் அறியலாம்.

திருச்சிற்றம்பலம்

பொது பண்: வியாழக்குறிஞ்சி

அவ்வினைக் கிவ்வினையாம் என்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடாதிருப்பதும் உந்தமக்கு ஊனமன்றே
கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறா திருநீலகண்டம் 1

காவினை இட்டும் குளம்பல தொட்டும் கனி மனத்தால்
ஏவினையால் எயில் மூன்றெரித்தீர் என்று இருபொழுதும்
பூவினைக்கொய்து மலரடி போற்றுதும்நாம் அடியோம்
தீவினை வந்தெமைத் தீண்டப்பெறா திருநீலகண்டம் 2

முலைத்தடம் மூழ்கிய போகங்களும் மற்றெவையும் எல்லாம்
விலைத்தலை ஆவணம் கொண்டெமை ஆண்ட விரிசடையீர்
இலைத்தலைச் சூலமும் தண்டும் மழுவும் இவை உடையீர்
சிலைத்தெமைத் தீ வினை தீண்டப் பெறா திருநீலகண்டம் 3

விண்ணுலகாள்கின்ற விச்சாதரர்களும் வேதியரும்
புண்ணியர் என்று இருபோதும் தொழப்படும் புண்ணியரே
கண் இமையாதன மூன்றுடையீர் உம் கழலடைந்தோம்
திண்ணிய தீ வினை தீண்டப்பெறா திருநீலகண்டம் 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றுஇணை இல்லா மலை திரண்டன்ன திண் தோளுடையீர்
கிற்றெமை ஆட்கொண்டு கேளாதொழிவதும் தன்மை கொல்லோ
சொற்றுணை வாழ்க்கை துறந்து உம் திருவடியே அடைந்தோம்
செற்றெமைத் தீ வினை தீண்டப் பெறா திருநீலகண்டம் 5

மறக்கும் மனத்தினை மாற்றி எம் ஆவியை வற்புறுத்திப்
பிறப்பில் பெருமான் திருந்தடிக்கீழ் பிழையாக வண்ணம்
பறித்த மலர் கொடுவந்துமை ஏத்தும் பணியடியோம்
சிறப்பிலித் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம் 6-7

கருவைக் கழித்திட்டு வாழ்க்கை கடிந்தும் கழலடிக்கே
உருகிமலர் கொடு வந்துமை யேத்துதும் நாம் அடியோம்
செருவில் அரக்கனைச் சீரில் அடர்த்து அருள் செய்தவரே
திருஇலித் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம் 8

நாற்றமலர்மிசை நான் முகன் நாரணன் வாதுசெய்து
தோற்றமுடைய அடியும் முடியும் தொடர்வரியீர்
தோற்றினுந் தோற்றுந் தொழுது வணங்குதும் நாம் அடியோம்
சீற்றமதாம் வினை தீண்டப்பெறா திருநீலகண்டம் 9

சாக்கியப் பட்டும் சமண் உருவாகி உடை ஒழிந்தும்
பாக்கியமின்றி இருதலைப் போகமும் பற்றும் விட்டார்
பூக்கமழ் கொன்றைப் புரிசடையீர் அடி போற்றுகின்றோம்
தீக்குழி தீவினை தீண்டப் பெறா திருநீலகண்டம் 10

பிறந்த பிறவியில் பேணி எம் செல்வன் கழல் அடைவான்
இறந்த பிறவி உண்டாகில் இமையவர்கோன் அடிக்கண்
திறம்பயில் ஞானசம்பந்தன் செந்தமிழ் பத்தும் வல்லார்
நிறைந்த உலகினில் வானவர் கோ னொடும் கூடுவரோ 11

(பதிகம் முற்றிற்று)

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிய இரண்டாந் திருமுறை

## பதிகம் 4

### தடைப்பட்ட திருமணம் (பெண், ஆண் அனைவருக்கும்) இனிதே விரைவில் நடைபெற அன்புடன் ஓதவேண்டிய பதிகம்

சம்பந்தர் திருமருகலில் எழுந்தருளியுள்ள மாணிக்க வண்ணர் கழலினை வணங்கும் பொருட்டு ஆலயத்திற்கு வந்து கொண்டிருந்தார். அது சமயம் வணிகப் பெண்ணின் அழுகுரல் அவரது செவியில் விழுந்தது. அந்நாளில், வணிகன் மகள் ஒருத்தி, தன்னை மணம்புரிய இருந்த ஒருவனுடன் மடத்தில் துயின்றாள். இரவில் பாம்பு கடித்து மணமகன் இறந்து போனான். இத்துயரம் நீங்கி, இறந்தவன் எழுந்து திருமணம் இனிதே நடக்க அருளும்படி சம்பந்தர் இறைவரை வேண்டிப்பாடிய பதிகம் இது. பதிகம் முடிந்ததும் இறந்தவன், உறங்கியவன் எழுவது போல எழுந்தான்; திருமணமும் முடிந்தது.

இன்றும், திருமணமாகதவர்கள் இப்பதிகத்தைப் பாடி பலன் பெற்று வருகின்றனர். 37 வயதான ஒரு பெண் இப்பதிகத்தை ஓதி பலனடைந் துள்ளார்.

திருச்சிற்றம்பலம்

திருமகள் பண்: இந்தளம்

சடையாய் எனுமால் சரண்நீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள் உள்மெலிவே (1)

சிந்தா எனுமால் சிவனே எனுமால்
முந்தா எனுமால் முதல்வா எனுமால்
கொந்தார் குவளை குலவும் மருகல்
எந்தாய் தகுமோ இவள் ஏசறவே 2

அறையார் கழலும் அழல் வாயரவும்
பிறையார் சடையும் உடையாய் பெரிய
மறையார் மருகல் மகிழ்வாயிவளை
இறையார் வளைகொண் டெழில் வவ்வினையே 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலிநீர் சடையில் கந்தாயுலகம்
பலிநீ திரிவாய் பழியில் புகழாய்
மலிநீர் மருகல் மகிழ்வாயிவளை
மெலிநீர் மையள் ஆக்கவும் வேண்டினையே 4

துணிநீல வண்ணம் முகில் தோன்றியன்ன
மணிநீலகண்டம் உடையாய் மருகல்
கணிநீலவண்டார் குழலாள் இவள்தன்
அணிநீல ஒண்கண் அயர்வு ஆக்கினையே 5

பலரும் பரவப்படுவாய் சடைமேல்
மலரும் பிறை ஒன்றுடையாய் மருகல்
புலரும் தனையும் துயிலாள் புடைபோந்து
அலரும் படுமோ அடியாள் இவளே 6

வழுவாள் பெருமான் சுழல் வாழ்களனா
எழுவாள் நினைவாள் இரவும் பகலும்
மழுவாள் உடையாய் மருகல் பெருமான்
தொழுவாள் இன்பத் துயர் ஆக்கினையே 7

இலங்கைக்கு இறைவன் விலங்கல் எடுப்பத்
துலங்கவ் விரல் ஊன்றலும் தோன்றலனாய்
வலங்கொள் மதில் சூழ் மருகல் பெருமான்
அலங்கல் இவளை அலர் ஆக்கினையே 8

எரியார் சடையும் அடியும் இருவர்
தெரியாத தொர் தீத்திரளாய் ஆயவனே
மரியார் பிரியா மருகல் பெருமான்
அரியாள் இவளை அயர்வாக்கினையே 9

அறிவில் சமனும் அலர் சாக்கியரும்
நெறியல்லன செய்தனர் நின்றுழல்வார்
மறிஏந்து கையாய் மருகல் பெருமான்
நெறியார் குழலி நிறை நீக்கினையே 10

வயஞானம் வல்லார் மருகல் பெருமான்
உயர்ஞானம் உணர்ந்து அடி உள்குதலால்
இயல்ஞான சம்பந்தன பாடல் வல்லார்
வியன் ஞாலமெல்லாம் விளங்கும் புகழே (11)

(பதிகம் முற்றிற்று)

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிகம் 5

## குழந்தை செலவம் பெற பாராயணம் செய்ய வேண்டிய பதிகம்

திருஞானசம்பந்தப் பெருமான் 'திருவெண்காடு' உறையும் பெருமானை வணங்கி அருளிய அரிய பதிகம் இத்திருப்பதிகம். தென்னர்க்காடு மாவட்டத்தில் உள்ள 'பெண்ணாடம்' என்னும் ஊரில் 'அச்சுதகளப்பாளர்' என்பவர் வசித்துவந்தார். குழந்தைச் செல்வமின்றி நீண்ட நாட்களாக வருத்தமுற்றிருந்தார் அவர். இக்குறையை அவர் தம் குல குருவாகிய 'சகலாகம பண்டிதரிடம்' கூறினார். அப்பண்டிதரும், தமிழ்வேதமாகிய தேவாரத் திருமுறை நூலில் கயிறு சார்த்திப் பார்த்தார். அத சமயம் இப்பதிகம் வந்தது.

குலகுருவின் அறிவுரைப்படியே, அச்சுத களப்பாளார் தம்பதிகள் திருவெண்காடு அடைந்து, முக்குள தீர்த்தத்தில் நீராடி ஆலய வழிபாடு செய்து வந்தார்கள். இதன் பயனாகவே சந்தனா சாரியர்களில் மிகச் சிறந்தவரான "மெய்கண்டார்" எனும் அரியஞானியை மகனாகப் பெற்றார்கள்.

இப்பதிப்பகத்தை 48 நாட்கள் காலையும் மாலையும் அன்புடன் ஓதி, திருவெண்காடு பெருமானை ஒருமுறை வணங்கினால், நல்ல பிள்ளையைப் பெறலாம் என்பது தமிழ் வேதத்தின் ஆணையாகும். (இவ்விரதம் அனுட்டிப்பவர்கள் தினமும் காலையில் பசுவிற்கு ஒரு பிடி புல் அல்லது பழம் அளித்தல் மிகவும் நலமே ஆகும்.) பலர் பலன் பெற்றுள்ளனர்.

திருச்சிற்றம்பலம்

**திருவெண்காடு** **பண்: சீகாமரம்**

கண்காட்டும் நுதலானுங், கனல் காட்டும் கையானும்
பெண்காட்டும் உருவானும், பிறைகாட்டும் சடையானும்
பண்காட்டும் இசையானும், பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும் விடை காட்டும் கொடியானே 1

பேய் அடையா பிரிவு எய்தும் பிள்ளையினோடு உள்ள நினைவு
ஆயினவே வரம் பெறுவர் ஐயுற வேண்டா ஒன்றும்
வேயன தோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய் வினையார் அவர் தம்மைத் தோயாவாம் தீ வினையே 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணோடு நீர், அனல், காலோடு ஆகாயம் மதி இரவி
எண்ணில் வரும் இயமானன் இகபரமும் எண்திசையும்
பெண்ணினொடு ஆண், பெருமையொடு சிறுமையுமாம் பேராளன்
விண்ணவர் கோன் வழிபட வெண்காடு இடமா விரும்பின்னே 3

விடமுண்ட மிடற்று அண்ணல் வெண்காட்டின் தண்புறவின்
மடல் விண்ட முடத்தாழை மலர்நிழைக் குருகு என்று
தடமண்டு துறைக்கெண்டை தாமரையின்பூ மறையக்
கடல் விண்ட கதிர் முத்த நகை காட்டும் காட்சியதே 4

வேலைமலி தண்கானல் வெண் காட்டான் திருவடிக்கீழ்
மாலைமலி வண்சாந்தால் வழிபடு நன் மறையவன்தன்
மேல் அடர், வெங்காலன், உயிர், விண்டபினை நமன் தூதர்
ஆலமிடற்றான் அடியார் என்று அடர அஞ்சுவரே 5

தண் மதியும் வெய்யரவும் தாங்கினான் சடையினுடன்
ஒண் மதியநுதல் உமைஓர் கூறு உகந்தான் உறைகோயில்
பண்மொழியால் அவன் நாமம் பலஓதப் பசுங்கிள்ளை
வெண்முகில்சேர் கரும்பெணைமேல் வீற்றிருக்கும் வெண்காடே 6

சக்கரம் மாற்கு ஈந்தானும் சலந்தரனைப் பிளந்தானும்
அக்கரைமேல் அசைத்தானும் அடைந்த அயிராவதம் பணிய
மிக்கு அதனுக்கு அருள் சுரக்கும் வெண்காடும் வினைதுரக்கும்
முக்குளம் நன்கு உடையானும் முக்கண் உடை இறையவனே 7

பண்மொய்த்த இன்மொழியாள் பயம் எய்த மலை எடுத்த
உன்மத்தன் உரம் நெரித்து அன்று அருள் செய்தான் உறைகோவில்
கண் மொய்த்த கருமஞ்ஞை நடமாடக் கடல் முழங்க
விண் மொய்த்த பொழில் வரிவண்டு இசை முரலும் வெண்காடே 8

கள்ளார் செங்கமலத்தான் கடல் கிடந்தான் என இவர்கள்
ஒள்ளாண்மை கொளற்கு ஓடி உயர்ந்து ஆழ்ந்தும் உணர் வரியான்
வெள்ளானை தவம் செய்யும் மேதகு வெண்காட்டான் என்று
உள்ளாடி உருகாதார் உணர்வுடைமை உணரமே 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதியர்கள் பிண்டியர்கள் மிண்டு மொழிபொருள் என்றும்
போதையர்கள் அவர், பிரிமின் அறிவுடையீர் இது கேண்மின்
வேதியர்கள் விரும்பிய சீர் வியன் திருவெண்காட்டான் என்று
ஓதியவர் யாதும் ஒரு தீது இலர் என்று உணருமினே 10

தண்பொழில் சூழ் சண்பையர் கோன் தமிழ் ஞானசம்பந்தன்
விண்பொலி வெண்பிறைச் சென்னி விகிர்தன் உறை வெண்காட்டைப்
பண்பொலி செந்தமிழ் மாலை பாடிய பத்து இவை வல்லார்
மண்பெலிய வாழ்ந்தவர் போய் வான் பொலியப் புகுவாரே 11

(பதிகம் முற்றிற்று)
திருச்சிற்றம்பலம்

## நற்குணம்

தீப்பந்தத்தை கீழ்நோக்கிப் பிடித்தாலும் அதன் ஜுவாலை மேல் நோக்கி எழுவது போல் உயர்ந்த குணத்தைக் கீழ்படுத்த அற்பர்களால் சொர்ப்பனத்திலும் முடியாது.

## அணிகலன்கள்

கண்ணுக்கு அணிகலன் கண்ணோட்டம்
காதுக்கு அணிகலன் நல்ல கேள்வி
வாய்க்கு அணிகலன் சத்தியம்
கரத்திற்கு அணிகலன் தானதருமம்
மனத்திற்கு அணிகலன் தியாணம்

பிறரைக் கெடுத்துதான் மட்டும் வாழ நினைத்தால் பேராசை
தான்மட்டும் வாழ நினைத்தால் பற்று
தானும் தன்இனமும் நாடும் வாழ நினைத்தால் அன்பு
உலகம் முழுவதும் வாழ நினைத்தால் அருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# நன்றி மறவோம்

எமது குடும்ப விளக்குகளில் ஒன்றாகப் பிரகாசித்துக் கொண்டிருந்த ரவிக்குருக்கள் அவர்களின் திடீர் மரணச் செய்தி கேட்டு உதவிபுரிந்த அனைவர்க்கும் நன்றிகள். ஆழ்கடலில் அகப்பட்டு உயிர்நீத்த அவரது உடலை வெளிக்கொணர்ந்து வைத்திய சாலைக்குச் கொண்டு செல்வதற்க மிக வேகமாகச் செயல்பட்டவர்கள் பலர். அவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள். எமது மரணத் துயரில் பங்கு கொண்டு பெரும் உதவிபுரிந்த நீர்கொழும்பு சித்திவிநாயகர் கோவில் நிர்வாக சபையினர் நீர்கொழும்பு வாழ் மக்கள், தலாதுவ கருமாரி அம்மன் கோவில் நிர்வாகசபையினர், மக்கள் அனைவர்க்கும் நன்றிகள்.

ரவி ஐயா அவர்களை சிங்கப்பூருக்கு அழைத்துச் சென்று நல்வழிப்படுத்திய அவருடைய அண்ணன் சாம் ஜெகதீஸ்வரக் குருக்கள் அவர்கள் சரீர, பொருள் பண உதவி புரிந்து பல வழியாலும் முன்னின்று தன் கடமையைச் செய்தார்கள். அவருக்கும் எமது நன்றிகள். அவருடைய சீடனும், ரவிக்குருக்களுடன் சிங்கப்பூரில் வசித்தவருமாகிய குகன் அவர்களுக்கும் எமது நன்றிகள்.

இத்துயரச் செய்தி கேட்டது முதல் அவரது இறுதிக் கடமைகள் முடியும் வரை முழுப்பொறுப்பாக நின்று எம்மை ஆறுதல் படுத்திக் கடமைகளைச் செய்த சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ. நா. சர்வேஸ்வரக்குருக்கள் அவர்களுக்கு எமது அநேக நன்றிகள். வெளிநாடுகளிலிருந்ம், உள்நாட்டிலிருந்தும் தொலைபேசி, தொலை நகல் மூலம் அனுதாபச்செய்தி அனுப்பியவர்களுக்கும், யாழ்ப்பாணத்தில் இச்செய்தியை பத்திரிகை மூலமாகவும், நேரடியாகவும் தெரிவித்த இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர். தா. மகாதேவக் குருக்கள் குடும்பத்தினர்களுக்கும், அஞ்சலி தெரிவித்து பத்திரிகைகளிலும், பிரசுரங்களிலும், நேரடியாகவும் எமை ஆறுதல் படுத்திய அனைவர்க்கும் இந்நூல் தொகுப்பிற்கு உதவிபுரிந்த தலாதுவ கருமாரி அம்மன் கோவில் பிரதம குரு இ. குகதாஸக் குருக்கள் அவர்கட்கும், இந்நூலை மிகவிரைவில் அச்சிட்டு உதவிய சாந்தி அச்சக நிறுவனத்தினர்க்கும் எமது நன்றிகள் மற்றும் பல அஞ்சலி செய்திகள் எமக்கு வந்ததை அச்சிடமுடியாமல் போய்விட்டதை மனவருத்தத்துடன் தெரிவித்து அவர்கள் எல்லோர்க்கும் எமது நன்றிகளைக் தெரிவிக்கிறோம். மற்றும் எல்லாவிதத்திலும் உதவி புரிந்த உற்றார்கள் உறவினர்கள் நண்பர்கள் அனைவர்க்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கிறோம்.

நன்றி, நன்றி

இங்ஙனம்

**திருமதி பா. நாகேஸ்வரி**

மக்கள், மருமக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

தந்தை வழிப் பேரன்: குகனேச்சர்மா
சாந்தநாயகி அம்மா

தகப்பன் + தாய்: பாலசுப்பிரமணியக்குருக்கள்
நாகேஸ்வரி

சகோதர சகோதரிகள்:
மனோரஞ்சிதம்
சர்வேஸ்வரக்குருக்கள் (வசந்தன்)
பாலகௌரி
பாலராணி
குகேஸ்வரக் குருக்கள் (கண்ணன்)
பாலசுந்தரக் குருக்கள்
லதா
சத்தியா
கலைவாணி
அமரர்: ரகுநாதக்குருக்கள்
இந்திரசர்மா (இந்திரன்)

அத்தான்மார்:
**கு. குகேஸ்வரக்குருக்கள் (தேவன்)**
பிரதமகுரு நீர்கொழும்பு சித்திவிநாயகர் கோவில்

**இ. சூரியப்பிரபாகரக்குருக்கள் (சூரி) ஆளவெட்டி**
கொட்டாஞ்சேனை மாரி அம்மன் கோவில்

**பூர்ண் சந்திரானந்தக் குருக்கள்**
மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் கோவில்

**ச. ஜெந்தி நாதக் குருக்கள்** (பிள்ளையார் கோவில், இரத்தோட்டை)

**ஸ்ரீனி. குகேஸ்வரக் குருக்கள்** (கனடா)

**பா. ஜோதிநாதன்** (சுவிஸ்)

அண்ணிமார்: ஸ்ரீவித்யா சர்வேஸ்வரக்குருக்கள்
சுபா குகேஸ்வரக் குருக்கள், மாதங்கி பாலசுந்தரக் குருக்கள்

பெறாமக்கள்: கீர்த்தனா, வலனா, பாலகிருஷ்ணன், சங்கீதா,
பாலகாந்தன், பாலினி

மருமக்கள்: ஸ்ரீவித்யா, நக்கீரன், அனுஷா, அஜினன், அனுராதா,
அஜிதா, அமுதா, கஜன், ஜெனேஸ், பவதாரணி, தினேஸ்

தாய்வழிப் பேரன்: கு. இராமநாதக் குருக்கள்
பேத்தி: இராசம்மா (இணுவில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தி அச்சகம் - நீர்கொழும்பு
☎ 031-22143 / 36883

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org